**Deposition of Witness** **Page. No.**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.72/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **ASHOKAN** | **Caste** | |
| **Father Name** | **MUNIYAPPA NAIDU** | **Occupation** | **--** |
| **Village** | **CHENDRAMPALLI** | **Religion** | **HINDU** |
| **Taluk** | **GUDIYATTAM** | **Age** | **60** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2021.**

## *முதல் விசாரணை*

***நான் நூலிற்கு சாயம் போடும் வேலை செய்து வந்தேன் தற்போது வேலையை விட்டு நின்றுவிட்டேன். அ.சா.1 எனது சித்தப்பா மகள் ஆவார். எனது தங்கை மோனிகாவிற்கும் எனது உறவினர் மகன் பாபு என்பவருக்கும் 06.05.2011ம் தேதி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு ஒரு வருடம் கழித்து என் தங்கை அ.சா.1க்கு பெண் குழந்தை பிறந்தது. அவருக்கு ஆபரேஷன் செய்து பிரசவம் நடைபெற்றது. அதனால் அவர் ஒன்றரை வருட காலம் பளு எதுவும் தூக்கக்கூடாது, வீட்டுவேலை எதுவும் செய்யக்கூடாது பலவீனமாக இருப்பதாக மருத்துவர் சொன்னார். குழந்தை பிறந்த தகவலை 1வது எதிரிக்கு சொன்னோம் அவர் வந்து குழந்தையை பார்க்கவில்லை. பின்னர் அ.சா.1க்கு மேற்படி உடம்பு பலவீனமாக இருந்த காரணத்தினால் 2 வருடம் கழித்துதான் அனுப்புவோம் என்று நாங்கள் தெரிவித்தோம். அதன்பிறகு 1வது எதிரி நீதிமன்றத்தில் தன்னுடன் சேர்ந்து வாழுமாறு வழக்கை தாக்கல் செய்தார். அ.சா.1 அதன்பின்னர் வார விடுமுறைகளான சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைதோறும் குடியாத்தத்தில் உள்ள 1வது எதிரியின் வீட்டிற்கு வந்து செல்வார். அ.சா.1க்கும் எதிரிக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. எதிரி போனில் மணிக்கணக்காக யாரிடமோ பேசுவார் அதனை அ.சா.1 கேட்டால் அவரை அடிக்க வருவது திட்டுவதுமாக இருப்பார். ஏற்கனவே 20 சவரன் நகை போட்டிருந்தோம் மறுபடியும் 20 சவரன் நகை வேண்டும் வாங்கிக்கொண்டுவா என்று எதிரி அ.சா.1 யிடம் கேட்பார் வாங்கிக்கொண்டு வரவில்லையென்றால் நீ உன் வீட்டிற்கே போய்விடு என்று கூறியுள்ளார். தற்போது எங்களால் நகை போடமுடியாது சம்பாதித்து போடுகிறோம் என்று என் சித்தப்பா லட்சுமிபதி நாயுடு சொன்னார் அதன்பிறகு சித்தப்பாவும் காலமாகிவிட்டதால் நகை போடவில்லை. நீதிமன்றத்தில் சேர்ந்து வாழவேண்டும் என்று தீர்ப்பு சொன்னதால் நாங்கள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 ஐ எதிரியுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்றும் எதுவாகவிருந்தாலும் அங்குதான் வாழ வேண்டுமென்று கூறி என்னுடைய சித்தி பேபி எனது தங்கை மோனிகா, அ.சா.1 மோனிகாவின் குழந்தை ஆகியோருக்கு அறிவுரை கூறி நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு 2 நாட்கள் கழித்து அ.சா.1, அ.சா.1ன் குழந்தை மற்றும் அ.சா.1ன் தாயார் ஆகியோர்கள் எதிரி பாபுவின்***

***........2***

வீட்டிற்கு போனார்கள். அன்றைய தினம் எதிரியின் பாபுவின் தாயார் முனியம்மாள் எனது தங்கை வீட்டிற்குள் சேர்க்காமல் கோர்ட் சொன்னால் உன்னை வைத்துக்கொண்டு வாழ்ந்துவிடவேண்டுமா என்று கூறி எனது தங்கை அ.சா.1 ஐ வீட்டின் படி ஏறும்போதே வெளியே தள்ளிவிட்டார். அந்த சமயத்தில் வீட்டிற்குள் இருந்து வேறு ஒரு பெண்மணி வந்து என் தங்கை அ.சா.1ன் கையிலிருந்த குழந்தையை வாங்கி அதன் கழுத்தை நெரிக்க முயன்ற போது அ.சா.1ன் தாயார் சென்று குழந்தையை பிடுங்க முயற்சி செய்தபோது அந்த பெண்மணி நான்தான் எதிரி பாபுவின் பொண்டாட்டி என்று சொல்லி காலால் அ.சா.1 ஐ எட்டி உதைத்தார். எனது தங்கையின் கணவர் எனது தங்கையை கொம்பால் சரியாக அடிக்கவே நேராக குடியாத்தம் மகளிர் காவல்நிலையத்திற்கு சென்று எனக்கு போன் செய்தார். அ.சா.1 என்னை காவல்நிலையத்திற்கு வருமாறு தெரிவித்தார். அ.சா.1ன் கணவர் 2வது திருமணம் செய்துகொண்டிருந்தார் என்றும் பிராடு வேலை செய்து கொண்டிருக்கிறார் என்றும் எதிரிமீது புகார் கொடுத்தோம். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

## குறுக்கு விசாரணை

வழக்கு சம்மந்தமான விவரங்கள் அனைத்தும் எனது தங்கை அ.சா.1 சொல்லித்தான் எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் எதையும் நான் நேரிடையாக பார்க்கவில்லையென்று சொன்னால் அ.சா.1யிடம் வரதட்சணை கேட்டது சம்மந்தமாக நாங்கள் பஞ்சாயத்து செய்தோம் ஆனால் போலீஸ் ஸ்டேஷன் சென்று புகார் கொடுத்த தேதியன்று நடந்த சம்பவத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை. எதிரி அ.சா.1யிடம் வரதட்சணை கேட்டது சம்மந்தமாக பஞ்சாயத்து செய்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்த தேதியன்று நான் காவல்நிலையத்திற்கு பகல் சுமார் 12.00 மணியிலிருந்து 01.00 மணிக்குள்ளாக சென்றிருப்பேன். நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாகவே காவல்நிலையத்தில் அனைத்து நபர்களையும் விசாரணை செய்து முடித்துவிட்டிருந்தனர். நான் காவல்நிலையத்திற்கு சென்றவுடன் வழக்கு போட்டுவிட்டார்கள் என்ற விவரத்தை தெரிந்தவுடன் நான் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளலாம் என்று திரும்பிவந்துவிட்டேன் என்றால் சரிதான். இன்றைய தினம் சாட்சி சொல்ல எனது தங்கை என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனது தங்கை கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோன்று எந்தவித சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும் எதிரி மற்றும் அவரது குடும்பத்தினர் எந்தவொரு வரதட்சணை கொடுமையும் செய்யவில்லையென்றும், எனக்கு இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல.